# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ அதிவிசேஷமானது

අංක 2120/17 - 2019 අප්‍රේල් මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.04.25

*2120/17 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2002 ஏப்பிறல் மாதம் 29 ஆந் திகதிய 1234/9 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க காணி எடுத்தற் கட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம் (அ) வின் கீழான கட்டளையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளதோடு, அரசின் சார்பில் அச் சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக் காணித் துண்டுகளின் உடைமையும் பொறுப்பேற்கப்பட்டுள்ளன. எனினும் அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த காணித் துண்டுகளில் கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டினை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.*

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : LD/05/2001/HW/STDP/JBIC/177.
பிரதேச செயலாளரின் இல. : මහ/1/286/අත්/2019
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019 மாச்சு, 21.

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், (மஹரகம நகர சபை எல்லைகளில்) மாகும்புர கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட PP கொ 8542 ஆம் இலக்க ஆரம்ப வரைபடத்தில் கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

**1. துண்டு இல. 207 - தெல்கஹவத்தை - விஸ்தீரணம் : 0.0316 ஹெக்டயார்**

வடக்கு : துண்டு இல. 205, 204 மற்றும் ஓ. டி. பெரேரா உரிமை கோரும் தெல்கஹவத்தை; கிழக்கு : பிரபாத் மஞ்சுல உரிமை கோரும் தெல்கஹ வத்தை ; தெற்கு : சிலான் பிஸ்கட் லிமிடெட் உரிமை கோரும் தெல்கஹ கும்புர துண்டு இல. 67 மற்றும் கால்வாய்; மேற்கு: துண்டு இல. 206.

05-116

---

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை இரத்துச் செய்தல்*

*2010 யூன் மாதம் 22 ஆம் திகதிய 1659/10 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் (அத்தியாயம் 460) பிரசுரிக்கப்பட்ட 2010 யூன் மாதம் 11 ஆந் திகதிய 2010 ஆம் ஆண்டின் 94 ஆம் இலக்க காணி எடுத்தற் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் காப்புவாசகம்*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(அ) வின் கீழான கட்டளையில் விதிக்கப்பட்ட, காணித் துண்டுகள் முழுமையாக அரசுரித்தாக்கப்பட்டுள்ளன.

எனினும், பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிகளின் இருப்பாட்சி இலங்கை சனநாயகச் சோசலிசக் குடியரசு சார்பில் இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை எனவே, அச் சட்டத்தின் (1979 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினால் உட்புகுத்தப்பட்ட) 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், குறித்த 2010 யூன் மாதம் 22 ஆந் திகதிய 1659/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறித்த 2010 யூன் மாதம் 11 ஆந் திகதிய 2010 ஆம் ஆண்டின் 94 ஆம் இலக்க கட்டளையை இக் கட்டளை மூலம் இரத்துச் செய்கின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

எனது இல : LD/05/2007/PISD/17.
பிரதேச செயலாளரின் இல. : වැදී/3/ඉ.අ/මා.මැ
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத்த மெதுர", காணிச் செயலகம், இல. 1200/6,
ரஜமல்வத்தை வீதி, பத்தரமுல்லை,
2019 ஏப்பிறல், 09.

## அட்டவணை

தென் மாகாணம், காலி மாவட்டம், வெலிவிட்டிய - திவிதுர பிரதேச செயலாளர் பிரிவில், அக்குரெட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2008.06.30 ஆந் திகதிய GA/WDT/08/142 ஆம் இலக்க முதற்சுவட்டு வரைபடத்தில் காட்டப்பட்ட சுமார் 6.475 ஹெக்டயார் விஸ்தீரணமுடைய கீழ் விபரிக்கப்பட்ட எல்லைகளுள் அமைந்த காணித் துண்டு :

**1. துண்டு 'பீ' - மீ மெடும சனிசையிட் காணியின் ஒரு பகுதி - விஸ்தீரணம் : 6.475 ஹெக்டயார்**

வடக்கு : நமுணுகுல எனும் காணி மற்றும் இவ் வரைடத்தின் துண்டு ஏ மற்றும் நீர் விநியோக நிலைய வீதி; கிழக்கு : நீர் விநியோக நிலைய வீதி மற்றும் ஆராம வீதி; தெற்கு : ஆராம வீதி, இவ் வரைபடத்தில் துண்டு சீ, எம். பி. சோமவதி, பீ. ஏ. அனுலாவதி மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் ஹத்ஹவுலவத்தை, பி. ஏ. சாந்த மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் உடுமுல்லவத்தை மற்றும் வீதி; மேற்கு: பீ. ஏ. அனுலாவதி மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் ஹத்ஹவுல வத்தை, பீ. ஏ. சாந்த மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் உடுமுல்ல வத்தை, வீதி மற்றும் நமுணகுல எனும் காணி.

05-117